நீதிமன்றத்தில் வழக்கு உள்ள நிலையில் – நஷ்டஈடு வழங்க

# காரைக்குடியில் த.வெ.க. மூத்த நிர்வாகி கட்ட பஞ்சாயத்து!

## இந்திய மருத்துவ சங்கம் கண்டனம்!

சென்னை, ஜூலை 26-

நீதிமன்றத்தில் வழக்கு நிலுவையில் இருக்கும் நிலையில், காரைக்குடியைச் சேர்ந்த தமிழக வெற்றிக் கழகத்தின் மூத்த நிர்வாகி ஒருவர், பஞ்சாயத்து முறையில் சமரசக் கூட்டம் நடத்தி, மருத்துவ அலட்சிய குற்றச்சாட்டை எதிர்கொள்ளும் இரண்டு மருத்துவர்களை நோயாளியின் குடும்பத்துக்கு 50 லட்சம் வழங்குமாறு கட்டாயப்படுத்தியதாக இந்திய மருத்துவ சங்கத்தின் (IMA) தமிழ்நாடு கிளை குற்றம் சாட்டியுள்ளது.

சில வாரங்களுக்கு முன்பு, பைமோசிஸ் (Phimosis) என்ற, ஆணுறுப்பின் பிரச்சினையால் பாதிக்கப்பட்ட 10 வயது சிறுவனுக்கு, காரைக்குடியில் உள்ள ஒரு மருத்துவமனையில் அறுவைச் சிகிச்சை செய்யப்பட்டது.

அறுவைச் சிகிச்சைக்குப் பிறகு, இரத்த ஓட்டம் பாதிக்கப்பட்டதால் உறுப்பில் கருமை நிறமாக மாறிய சிக்கல் ஏற்பட்டது. பின்னர் அவர் மதுரையில் உள்ள ஒரு மருத்துவரிடம் அனுப்பப்பட்டு, அந்தப் பிரச்சினைக்காக மேலும் ஒரு அறுவைச் சிகிச்சை மேற்கொள்ளப்பட்டது.

“மருத்துவ அலட்சியத்தால்தான் இந்தச் சிக்கல் ஏற்பட்டது” என்று ஊடகங்களிடம் தெரிவித்த சிறுவனின் பெற்றோர், முதலமைச்சரின் தனிப்பிரிவுக்கு புகார் மனு அனுப்பினர்.

வியாழக்கிழமை வெளியிட்ட அறிக்கையில், இந்தச் சம்பவம் தொடர்பான மருத்துவ மற்றும் சட்ட ரீதியான உண்மைகளை ஏற்கனவே ஊடகங்களுக்கு விளக்கியுள்ளதாக இந்திய மருத்துவ சங்க தமிழ்நாடு கிளை தெரிவித்தது.

மேலும், மருத்துவர்களுக்கு எதிராக பொய்யான மற்றும் தவறாக வழிநடத்தும் வகையிலான ஊடக மற்றும் சமூக ஊடக பிரசாரங்களில் இருந்து பாதுகாப்பு கோரி, சம்பந்தப்பட்ட மருத்துவர்கள் நீதிமன்றத்தை அணுகியுள்ளதாக, இந்திய மருத்துவ சங்க மாநிலத் தலைவர் டாக்டர் பி. ஶ்ரீதர் (காரைக்குடியில் மருத்துவம் செய்து வருபவர்) கூறியுள்ளார்.

அந்த அறிக்கையில், காரைக்குடியைச் சேர்ந்த ஒரு “செல்வாக்கு மிக்க ஆளும் கட்சி நிர்வாகி” இரு தரப்பினரையும் அழைத்து கட்டப் பஞ்சாயத்து முறையில் சமரசக் கூட்டம் நடத்தியதாகவும், அதன் பின்னர் மருத்துவர்கள் பாதிக்கப்பட்ட குடும்பத்துக்கு குறிப்பிட்ட தொகையை வழங்கியதாகவும் கூறப்பட்டுள்ளது.

இந்திய மருத்துவ சங்க நடவடிக்கைக் குழுத் தலைவர் டாக்டர் கே. பிரகாசம், அந்த அறிக்கையின் இணை கையொப்பதாரராக இருந்து, மருத்துவர்கள் உடனடியாக குடும்பத்தினரின் கணக்குக்கு பணம் அனுப்ப வேண்டிய சூழ்நிலைக்கு தள்ளப்பட்டதாக தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில், “வழக்கு நீதிமன்றத்தில் நிலுவையில் இருக்கும் நிலையில் இவ்வாறு நடப்பது மிகவும் ஆபத்தான முன்னுதாரணமாக அமைந்துவிடும். மருத்துவர்களிடம் இருந்து இழப்பீடு பெறுவதற்கான வழிமுறையாக வெளிப்புற அழுத்தம் மாறினால், அது மருத்துவர்களிடையே அச்சத்தை ஏற்படுத்தும். இதனால் சிக்கலான மற்றும் அதிக ஆபத்துள்ள சிகிச்சைகளை மேற்கொள்ள மருத்துவர்கள் தயங்கக்கூடும். அதன் விளைவாக நோயாளிகளின் சிகிச்சை மற்றும் ஒட்டுமொத்த சமூக நலனும் பாதிக்கப்படும்,” என்றார்.

கழக தலைமைச் செயற்குழு உறுப்பினர் ப.ரங்கநாதனின் சகோதரர்

# ப.லோகநாதன் மறைவு!

## கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

சென்னை, ஜூலை 26-

தி.மு. கழக செயற்குழு உறுப்பினர் ப.ரங்கநாதனின் சகோதரர் ப.லோகநாதன் அவர்கள் நேற்று இயற்கை எய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் இம்மறைவு செய்தி அறிந்து தமது ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் இரங்கல் செய்தி வருமாறு :-

கழகத் தலைமைச் செயற்குழு உறுப்பினரும் சட்டமன்ற முன்னாள் உறுப்பினருமான ப.ரங்கநாதன் அவர்களின் சகோதரர் ப.லோகநாதன் அவர்கள் மறைந்த செய்தியறிந்து வருத்தமடைந்தேன்.

உடன்பிறந்த உறவை இழந்து தவிக்கும் சகோதரர் ரங்கநாதன் அவர்களுக்கும் அவரது குடும்பத்தாருக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் இரங்கல் செய்தி வெளியிட்டுள்ளார்.

மகளிர் அணி பொறுப்பு வழங்குவதாகக் கூறி

# ஆபாச படமெடுத்து இளம்பெண்ணுக்கு த.வெ.க. நிர்வாகி பாலியல் தொல்லை!

## ஆற்காடு போலீசில் பரபரப்பு புகார்!

ஆற்காடு, ஜூலை.26-

ஆற்காடு நகர காவல் நிலையத்தில் நேற்று த.வெ.க. மாவட்ட செயலாளர் மீது இளம்பெண் பாலியல் துன்புறுத்தல் புகார் அளித்ததால் பரபரப்பு ஏற்பட்டது. ராணிப்பேட்டை மாவட்டம் ஆற்காடு பகுதியைச் சேர்ந்த 34 வயது இளம்பெண், நேற்று ஆற்காடு நகர காவல்நிலையத்தில் அளித்த புகார் மனுவில் கூறியிருப்பதாவது:-

கடந்த 10 மாதங்களுக்கு முன்பு த.வெ.க.வில் என்னை இணைத்துக் கொள்வதற்காக அந்தக் கட்சியின் ராணிப்பேட்டை மேற்கு மாவட்ட செயலாளர் விஜய் மோகனை செல்போனில் தொடர்பு கொண்டு மகளிர் அணி பொறுப்பு வழங்க கேட்டிருந்தேன்.

சில நாட்கள் கழித்து விழாக்கள் செய்யும்போது என்னை அழையுங்கள் பங்கேற்கிறேன் என்றேன். பிறகு அவர் என்னுடைய இன்ஸ்டா பக்கத்தில் மெசேஜ் செய்ய ஆரம்பித்தார். நானும் அவர் கேட்கும் கேள்விகளுக்கு, பதில் அளித்தேன். அப்போது அவர் கட்சியில் பதவி என்பது அவ்வளவு சுலபமாக கொடுத்து விட முடியாது. நான் உனக்காக செய்கிறேன் என்று என்னிடம் பேச ஆரம்பித்தார். தொடர்ந்து எனக்கு பாலியல் ரீதியாக தொல்லை கொடுக்க ஆரம்பித்தார்.

மேலும் ஆபாச வீடியோக்கள் எடுத்து வைத்துக்கொண்டு மிரட்டி வருகிறார். இதுகுறித்து ராணிப்பேட்டை எம்.எல்.ஏ. தாஹிராவிடம் தெரிவித்தேன். அவர் விஜய் மோகனை அழைத்து பேசி அனைத்தையும் டெலிட் செய்து விட்டு இத்துடன் பிரச்சினையை முடித்துக் கொள்ளுமாறு கூறினார். நான் எல்லாவற்றையும் டெலிட் செய்து விட்டேன் என்று சொல்லிவிட்டு சென்றுவிட்டார். 2 நாட்கள் கழித்து மீண்டும் என்னை தொடர்பு கொண்டு நான் வீடியோ எதையும் டெலிட் செய்யவில்லை. எல்லாம் என்னிடம் உள்ளது.

உன்னை சும்மா விட மாட்டேன் என்று மிரட்டி நான் ஆளுங்கட்சி மாவட்ட செயலாளர் என்று கூறி ஆபாசமாக திட்டி என்னை ஒன்றும் செய்ய முடியாது என்றும் மிரட்டினார். மேலும் யார் யாரோ என்னை திடீரென்று சந்தித்து மிரட்டி வருகிறார்கள். இதனால் மிகுந்த மன உளைச்சலுக்கு ஆளானேன். ஆகவே தயவு செய்து நான் கொடுத்த புகாரின் அடிப்படையில் விஜய் மோகனை கைது செய்து அவருடைய செல்போனில் இருக்கும் என்னுடைய ஆபாச வீடியோக்களை டெலிட் செய்து அவர் மீது தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இவர் என்னிடம் பேசிய அனைத்து இன்ஸ்டாகிராம் ஸ்கிரீன் சாட்டுகளும் இந்த புகார் உடன் இணைத்துள்ளேன். இந்த புகார் அளித்த பிறகு அவர் என்னை என்ன வேண்டுமானாலும் செய்யலாம். ஏனென்றால் அவர் ஆளுங்கட்சி மாவட்ட செயலாளர் என்பதால் என் உயிருக்கு ஏதேனும் பாதிப்பு ஏற்பட்டால் எனக்கும் என் கணவர் மற்றும் என் குழந்தைகளுக்கும் தகுந்த பாதுகாப்பு வழங்குமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அந்த புகாரில் குறிப்பிட்டுள்ளார். இதையடுத்து, சிப்காட் இன்ஸ்பெக்டர் மங்கையர்க்கரசி ஆற்காடு நகர காவல் நிலையம் வந்து இளம்பெண்ணிடம் சுமார் 4 மணி நேரத்திற்கு மேல் விசாரணை செய்தார். தொடர்ந்து இளம்பெண் கூறும்போது, ‘என்னைப் போன்று நிறைய பேர் பாதிக்கப்பட்டுள்ளார்கள். எனவே போலீசார் தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார்.

தமிழ்நாடு முதல்வர் நீட் தேர்வுக்கு எதிரானவர் என்றால்

# மாணவர்கள் போராட்டத்தை அனுமதிக்க வேண்டும்!

## பேராசிரியர் எம்.எச்.ஜவாஹிருல்லா எம்.எல்.ஏ. அறிக்கை!



சென்னை, ஜூலை 26-

மனிதநேய மக்கள் கட்சித் தலைவர் பேராசிரியர் எம்.எச்.ஜவாஹிருல்லா எம்.எல்.ஏ. விடுத்துள்ள அறிக்கை வருமாறு :-

டெல்லியில் நீட் தேர்வுக்கு எதிராகவும் ஒன்றிய அமைச்சர் தர்மேந்திர பிரதான் பதவி விலக கோரியும் மாணவர்கள் முன்னெடுத்து வரும் போராட்டத்திற்கு ஆதரவாக, தமிழ்நாட்டிலும் பல்வேறு மாணவர் அமைப்புகள் அமைதியான ஜனநாயக வழியில் போராட்டங்களை நடத்த முன்வந்துள்ளன. ஆனால், இந்த அமைதிப் போராட்டங்களில் ஈடுபட்ட மாணவர்களை தமிழ்நாடு காவல்துறை கைது செய்து அப்புறப்படுத்தியிருப்பதும், சில இடங்களில் கல்லூரி வளாகங்களுக்குள்ளேயே நுழைந்து மாணவர் இயக்க நிர்வாகிகளை அழைத்து எச்சரித்திருப்பதும் கவலைக்குரிய செய்தியாகும்.

நீட் தேர்வின் கொடூரமான விளைவாக உயிரிழந்த அரியலூர் மாணவி அனிதாவின் இல்லத்திற்குச் சென்று ஆறுதல் கூறியவரும், நீட் தேர்வை கடுமையாக எதிர்த்தவரும் தான் தற்போதைய தமிழ்நாடு முதல்வர். அந்த நிலைப்பாட்டை வெளிப்படையாக முன்வைத்து மக்களின் ஆதரவைப் பெற்றவர், இன்று ஆட்சிப் பொறுப்பில் இருக்கும் போது, அதே நீட் தேர்வுக்கு எதிராக ஜனநாயக வழியில் குரல் கொடுக்கும் மாணவர்கள் காவல்துறை நடவடிக்கைகளுக்கு உள்ளாவது பெரும் முரண்பாடாகத் தெரிகிறது.

தமிழ்நாட்டில் மாணவர் போராட்டங்களுக்கு முழுமையாகத் தடை விதிக்கப்படவில்லை; அனுமதியின்றி நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டங்களையே காவல்துறை தடுத்துள்ளது என்று அமைச்சர்கள் விளக்கம் அளித்திருப்பதாக செய்திகள் வெளியாகியுள்ளன. ஆனால் மறுபுறம், மாணவர்கள் தங்களை வலுக்கட்டாயமாக காவல்துறை கைது செய்து அழைத்துச் சென்றதாகவும், போராட்டத்தில் ஈடுபடவேண்டாம் என்று மிரட்டப்பட்டதாகவும் குற்றம்சாட்டியுள்ளனர். இந்த முரண்பட்ட தகவல்கள் அரசின் உண்மையான நிலைப்பாடு குறித்து சந்தேகத்தை ஏற்படுத்துகின்றன.

குறிப்பாக, மாணவர்கள் போராட்டம் நடத்துவதாக அறிவிக்கப்பட்டவுடன் மெரினா கடற்கரை உள்ளிட்ட பகுதிகளில் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டது தேவையற்ற நடவடிக்கையாகவே பொதுமக்கள் கருதுகின்றனர். நீட் தேர்வுக்கு எதிராக தமிழ்நாடு அரசு உண்மையிலேயே உறுதியான நிலைப்பாட்டில் இருக்கிறது என்பதை நிரூபிக்க வேண்டுமெனில், அமைதியான ஜனநாயகப் போராட்டங்களுக்கு அனுமதி அளித்து, மாணவர்களின் பாதுகாப்பை உறுதி செய்ய வேண்டும்.

ஜனநாயகத்தில் கருத்து வேறுபாட்டை வெளிப்படுத்துவதும், அமைதியான முறையில் போராடுவதும் அரசியலமைப்புச் சட்டம் வழங்கியுள்ள அடிப்படை உரிமையாகும். அந்த உரிமையைப் பாதுகாப்பதே ஜனநாயக அரசின் கடமையாகும்.

எனவே, தமிழ்நாடு அரசு நீட் தேர்வுக்கு எதிராக அமைதியான முறையில் போராட விரும்பும் மாணவர்களுக்கு உரிய அனுமதியையும் முழுமையான காவல் பாதுகாப்பையும் வழங்க வேண்டும் என்று மனிதநேய மக்கள் கட்சியின் சார்பில் வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு பேராசிரியர் எம்.எச்.ஜவாஹிருல்லா எம்.எல்.ஏ. அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

கண்டுகொள்ளாத த.வெ.க. அரசு! திருப்பூர் மாவட்டத்தில்

# இழுபறியில் முருங்கை பவுடர் தொழிற்சாலை!

## விவசாயிகள் கோரிக்கை நிறைவேறுமா?

திருப்பூர்,ஜூலை. 26–

தமிழகத்தில் கொடி முருங்கை, செடி முருங்கை, மர முருங்கை, செம் முருங்கை என நான்கு வகை முருங்கைகள் உள்ளன. இவற்றில் திருப்பூர் மாவட்டம், வெள்ளக்கோவில், முத்தூர், காங்கயம், புதுப்பை, மூலனூர் பகுதிகளில் செடி முருங்கை, மர முருங்கை அதிக அளவில் சாகுபடி செய்யப்படுகின்றன. இந்தப் பகுதிகளில் விளையும் முருங்கைக் காய்கள் சத்துள்ளதாகவும், மருத்துவகுணம் கொண்டுள்ளதாகவும் இருக்கும். எனவே மாநிலத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் வர்த்தகர்கள் வெள்ளக்கோவில், சந்தைகளுக்கு வந்து முருங்கைக்காய்களை கொள்முதல் செய்து வந்தனர். மேலும் இங்கிருந்து வெளிநாடுகளுக்கும் முருங்கைக்காய் ஏற்றுமதி செய்யப்பட்டது. இதன் காரணமாக மூலனூர், வெள்ளக்கோவில் பகுதிகளில் முருங்கை சாகுபடி பரப்பு அதிகமானது. நூற்றுக்கும் மேற்பட்ட கிராமங்களில் 3 ஆயிரம் ஏக்கரில் முருங்கைசாகு படி செய்யப்படுகிறது.

இந்த நிலையில் மூலனூர், வெள்ளக்கோவில் முருங்கைக்கா யின் ருசியை விரும்பிய பெங்களூரு, மைசூரு, விஜயவாடா பகுதி வர்த்தகர்கள் இதன் விதையைப் பெற்று தங்கள் பகுதியிலேயே பயிரிட்டனர். இதையடுத்து, அந்தப் பகுதியினர் முருங்கைக்காய் கொள்முதல் செய்ய இங்கு வருவதை நிறுத்திவிட்டனர். இதன் காரணமாக வெள்ளக்கோவில் பகுதியிலிருந்து பிற மாநிலங்களுக்கு அனுப்பப்படும் முருங்கைக் காய்களின் அளவு வெகுவாகக்குறைந்தது. இதனால், இந்தப் பகுதியில் விளையும் முருங்கைக் காய்களை ஓட்டன்சத்திரம், சென்னை போன்ற பெரிய சந்தைகளுக்கு கொண்டு சென்று தற்போது விவசாயிகள் விற்பனை செய்து வருகின்றனர்.

இதனிடையே, வெள்ளக்கோவிலில் முருங்கைக்காய் பவுடர் தொழிற்சாலை அமைக்க வேண்டுமென்று விவசாயிகள் நீண்ட காலமாக கோரிக்கை விடுத்து வருகின்றனர். முருங்கைக்காய் வரத்து அதிகமானால் ஒரு கிலோ ரூ.2க்கும், வரத்துகுறைந்தால் ஒரு கிலோ ரூ.50, ரூ.70, ரூ.100 வரையும் விற்கிறது. விலை அதிகம் இருக்கும்போது, சாகுபடி பரப்பு குறைவாக இருக்கும் அல்லது காற்று மழையால் பாதிக்கப்பட்டு இருக்கும். தினமும் பல டன் முருங்கை விளையும் நிலையில் விவசாயிகளுக்கு போதிய விலைகிடைக்காமல் பாதிக்கப்பட்டு வருகின்றனர். எனவே முருங்கைக்காய் பவுடர் தொழிற்சாலை அமைத்தால், வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யமுடியும். மேலும் முருங்கைக் காய்களை சேமித்து விற்பனை செய்ய அரசு ஒரு குளிர்பதன கிடங்கு அமைத்து கொடுத்தால் சேமித்து வைத்து விற்பனை செய்யும்போது விவசாயிகளுக்கு நியாயமான விலை எப்போதும் கிடைக்கும்.

பல ஆண்டுகளாக முருங்கை விவசாயிகள் இது தொடர்பாக தொடர்ந்து கோரிக்கை விடுத்து வருகிறார்கள்.

ஆனால் கோரிக்கையை தவெக அரசு கண்டுகொள்ளாமல் இருப்பது விவசாயிகள் மத்தியில் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது.

இது குறித்து வெள்ளக்கோவில் முருங்கை விவசாயிகள் கூறியதாவது:

வெள்ளகோவில், மூலனூர் பகுதியில் தினமும் 100 டன் முருங்கைக்காய்கள் விளை கின்றன. விலையில் ஏற்றத்தாழ்வு அடிக்கடி நிகழ்வதால், விவசாயிகள் காய் பறிப்பு கூலியே கொடுக்க முடியாமல் தவிக்கும் நிலை உள்ளது. முருங்கைக்காய்களை காயவைத்து பவுடராக மாற்றும் தொழிற்சாலை அமைக்க வேண்டும் என பல ஆண்டுகளாக அரசிடம் கோரிக்கை விடுத்து வருகிறோம். முருங்கைக் காய் பவுடரை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதன் மூலமாக இந்தப் பகுதி விவசாயிகள் வளம் பெறுவது டன் அரசுக்கும் வருவாய் கிடைக்கும். பல்வேறு சிறப்புகள் கொண்ட இந்த பகுதி முருங்கைக்காயின் பயனை அனைவரும் பெறும் வகையில், இங்கு முருங்கைக்காய் பவுடர் தொழிற்சாலை அல்லது முருங்கைக்காய் குளிர்பதன கிடங்கு அமைக்க அரசு உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று கூறினர்.

கோவை தெற்கு மாவட்டச் செயலாளர் தளபதி முருகேசன் தாயார்

# மணியம்மாள் (எ) மணிமேகலை மறைவு!

## கழகத்தினர் அஞ்சலி!



கோவை, ஜூலை. 26-

கோவை தெற்கு மாவட்ட கழக செயலாளர் தளபதி முருகேசன் அவர்களின் தயார் மணியம்மாள் (எ) மணிமேகலை அவர்கள் (வயது 87) வயது முதிர்வின் காரணமாக 25.07.2026 அன்று அதிகாலை 4.00 மணியளவில் அவரது இல்லத்தில் இயற்கை எய்தினார் என்பதை ஆழ்ந்த வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

தகவல் அறிந்ததும் கழக நிர்வாகிகள், பொது மக்கள் அவரது இல்லத்திற்கு சென்று அன்னாரின் உடலுக்கு மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினர்.

மறைந்த மணியம்மாள் (எ) மணிமேகலை அவர்களுக்கு 4 மகன்கள் உள்ளனர், அவரின் மூத்த மகன் ஜெகநாதன் ஏற்கனவே காலமாகிவிட்டார். மணியம்மாள் (எ) மணிமேகலை அவர்களின் இறுதிச் சடங்குகள் சூலூர் வசந்த விகாரில் உள்ள தெய்வத்திரு ஜெகநாதன் இல்லத்தில் காலை 9:00 மணிக்கு நடைபெற உள்ளது. பின்பு ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டு ராமநாதபுரம் மயானத்தில் உடல் நல்அடக்கம் செய்யப்படுகிறது என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.

குன்னூர் ஒன்றியம் - ஜெகதளா- உலிக்கல் பேரூர்க் கழகம் -

# கண்டோன்மெண்ட் நகரிய தி.மு.க செயல்வீரர்கள் கூட்டம்!

## கே.எம்.ராஜூ எம்.எல்.ஏ. தலைமையில் நடைபெற்றது!



உதகை, ஜூலை.26–

நீலகிரி மாவட்டம், குன்னூர் ஒன்றியம் ஜெகதளா உலிக்கல் பேரூர் கழகம் மற்றும் கண்டோன்மெண்ட் நகரிய திமுக செயல்வீரர்கள் கூட்டம் குன்னூர் புளூ ஹில்ஸ் கூட்ட அரங்கில் மாவட்ட கழக பொறுப்பாளர் குன்னூர் சட்டமன்ற உறுப்பினர் கே.எம். ராஜூ தலைமையில் நடைபெற்றது.

உலிக்கல் பேரூர் செயலாளர் ரமேஷ் வரவேற்று பேசினார், மாவட்ட அவைத் தலைவர் போஜன், குன்னூர் ஒன்றிய செயலாளர் பிரேம்குமார், மாவட்ட துணை செயலாளர் லட்சுமி, தலைமை செயற்குழு உறுப்பினர் சுனிதா நேரு, ஜெகதளா பேரூர் செயலாளர் சஞ்சீவ்குமார், பொதுக்குழு உறுப்பினர் காளிதாசன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

கூட்டத்தில், வரும் உள்ளாட்சி தேர்தலில் குன்னூர் ஒன்றியம் ஜெகதளா உலிக்கல் பேரூர் கழகம் மற்றும் கண்டோன்மெண்ட் நகரிய பகுதிகளில் நூறு சதவீதம் வெற்றி பெற அயராது உழைப்பது எனவும் தீர்மானிக்கப்பட்டது.

கூட்டத்தில், ஒன்றிய கழக நிர்வாகிகள் சர்தார் பாட்சா, ஜோசப், ராமசாமி, மகேஸ்வரி, அமானுல்லா, கருணாநிதி, தவமணி, செந்தில்குமார், உலிக்கல் பேரூர் கழக நிர்வாகிகள் மஜித், ராஜேஷ், கந்தசாமி, நிர்மலா, ராமசுந்தரம், செல்வராஜ், ஜெகதளா பேரூர் கழக நிர்வாகிகள் லியோன், சானவாஸ், மோகன், சித்ரா, பாபு, வில்லியம் ஆல்பர்ட், தினகரன், கண்டோன்மெண்ட் நகரிய கழக நிர்வாகிகள் அப்துல் சர்தார், ஜோசப், பிரேம்குமார், கிளாரா, பாலகிருஷ்ணன், வினோத்குமார், மூர்த்தி உட்பட அணிகளின் நிர்வாகிகள், கிளை கழக நிர்வாகிகள், கழக செயல்வீரர்கள் திரளாக கலந்து கொண்டனர். கூட்டம் முடிவில் கண்டோன்மெண்ட் நகரிய செயலாளர் மார்டின் நன்றி கூறினார்.



கோவை மாநகர் மாவட்டம், நஞ்சுண்டாபுரம் பகுதி, 62வது வட்டக் கழக செயல்வீரர்கள் ஆலோசனைக் கூட்டம் பகுதி கழக பொறுப்பாளர் பாரதி நகர் செல்வராஜ் தலைமையில் நடைபெற்றது. கூட்டத்தில் மாவட்டப் பொறுப்பாளர் துரை.செந்தமிழ்ச் செல்வன் கலந்து கொண்டு ஆலோசனைகளை வழங்கினார். இதில் கோவை மாநகர் மாவட்ட துணை செயலாளர் கோட்டை அப்பாஸ், கல்பனா செந்தில், வட்டக் கழக பொறுப்பாளர்கள் நியான், குமார், மாமன்ற உறுப்பினர் ரேவதி முரளி உள்பட கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.